உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி—ருந.] துன்முகி வருடம்—தைமீ [பகுதி—க.
Vol. 53. January-February—1957. No. 1.

உள்ளுறை

பாராட்டற்குரியது: 1
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

சிலப்பதிகாரம்—கானல் வரி: 13
பண்டித-வித்துவான், இ. சங்குப்புலவர்

போக்கு வரத்து முன்னேற்றம்: 17
N. பாலுசாமி

இலக்கிய நண்பர்கள்: 24
கதி. சுந்தரம்

கம்பர் யார்? 31
டாக்டர். மா. இராசமாணிக்கனார்

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி ...
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0

1957

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு:


நிர்வாக ஆசிரியர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (பார்-அட்-லா)

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செர்காவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை

3. டாக்டர். மா. இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் ச[illegible]ங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

4953

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி–ருங.] துன்முகி௵—தைமீ [பகுதி–க.
Vol. 53. January-February—1957. No. 1.

## பாராட்டற்குரியது

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஒளவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

உலக வாழ்வில் இன்றையநிலை பெரிதும் வியந்து யாவரும் விரும்பும் சிறப்புடையதாகும். மக்களினத்தின் விஞ்ஞான அறிவு மிகவும் வளர்ந்திருக்கிறது. லுகாம்தே தூனய் என்பவர் கூறுவது போல, இன்று, காலத்தாலும் இடத்தாலும் பிரிந்து நிலவுலகின் மூலை முடுக்குகளில் வாழ்பவர் அனைவரும் மிக்க அண்மையில் நெருங்கி யுள்ளனர். பல்லாயிர மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளில் வாழ்பவர் வானவூர்திகளாலும் வானொலியாலும் தொலைபேசிகளாலும் ஓர் ஊரில் வாழ்பவர் போலவும் ஒரு வீட்டில் வாழ்பவர் போலவும் போக்கு வரவு புரிந்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டும் வாழ்கின்றனர். புராண இதிகாசங்களிலும் கற்பனைக் கதைகளிலும் மக்கள் இவ்வாறு போக்குவரவுபுரிந்ததாகப் படித்திருக்கிறோம்; பெரியோர் ஞானக்கண்கொண்டு நெடுந்தொலைவில் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொண்டதாக அந்நூல்கள் கூறுகின்றன. அக் கற்பனைக் காட்சிகள் இன்று உண்மை நிகழ்ச்சியாய் நம் கண் முன்னே நிகழ்வதைப் பார்க்கிறோம்.

*

பண்டைநாளில் வாழ்ந்தோர் மண்ணுலகத்துக்கும் தேவருலகத்துக்கும் போவதும் வருவதும் செய்து வந்தனர் என்று அந்தப் பழைய நூல்கள் நவலுகின்றன. அவற்றைத் தான் இன்று நம்மால் காண முடியவில்லை. ஆனால் இக்கால விஞ்ஞானிகள் வானத்தில் தோன்றும் கோள்களைக் கண்டு அங்கே போய்வர நினைக்கின்றனர். மண்ணுலகத்தில் மக்கள் விஞ்ஞானக் காட்சியால் கண்ட கருவிகளின் வாயிலாக அக்கோள்களின் தொடர்பு பெற முயன்றுவருகின்றனர். இயற்கையின் அகத்தே நுழைந்து அதன் நுட்பங்கள் பலவற்றை அறிந்துகொள்ள முயன்று பெற்ற வெற்றியாலும் அறிவுக் காட்சியாலும் இம் முயற்சிகளில் காலப்போக்கில் வெற்றி பெறுவர் என்று உறுதியாகக் கூறலாம்.

ஒரு காலத்தில் மக்கள் பலரும் நிலம் நீர் காற்று முதலிய எல்லாவற்றிற்கும் முதற்காரணம் அணு என்றே கூறிவந்தனர். வைசேடிகர் முதலிய சமயக் கணக்கர் எல்லாவற்றுக்கும் காரணம் அணு என்று தான் இசைத்துள்ளனர். இன்று அணுவையும் துளைத்து உடைத்து அதற்கு முதற்காரணம் ஆற்றல் (சக்தி) என்ற முடிபுக்கு விஞ்ஞானம் வந்திருக்கிறது. சிவநெறிக்கண்நின்ற பண்டையோர், எல்லாவற்றுக்கும் முதற்காரணம் மாயைஎன்ற ஓர்ஆற்றல் என்றுகூறி, மாயைஎன்ற சொல்லையும் மாய்தல் ஆதல் என்று பிரித்து, இரண்டிற்கும் பொதுவாய் நிற்கும் தல் என்னும் விகுதியை நீக்கி, மாயா எனக் கூட்டி உலகு ஒடுங்குதற்கும் மீளத் தோன்றுதற்கும் காரணமான-இன்னதென்று அறியவாராத-ஆற்றல் என்று இயம்பினர். இன்றைய அணு விஞ்ஞானிகளும் அணுவுக்குள் அடங்கி இன்னதென்று அறியவாராமல் இருக்கும் ஆற்றல் (Unknown energy) தான் அதன் ஆக்கத்துக்குக் காரணம் என்று கண்டுள்ளனர். இவ்வாராய்ச்சிகளால் முன்பு கற்பனை நிலையில் கண்ட காட்சிகளும், காட்சிக்கு அகப்படாவை எனக் கைவிட்டவைகளும் கண்கூடாக வைத்து ஆராயப்படுவதை நாம் அறிகின்றோம். இந்த அறிவால் இன்னதன்மையதென்று எந்

விஞ்ஞானியாலும் உயிர்நூற் புலவராலும் காணப்படாமல் நமது உடலுக்குள் நிலவும் உயிரையும் அதற்கு உள்ளீடாகிய பரம்பொருளையும் நாம் காண்டல் கூடும் என்ற நம்பிக்கை மக்களினத்துக்கு இப்போது உண்டாகியிருக்கிறது.

உலகு உயிர்களின் இயல்பையும் இவற்றிற்கு அப்பாற்பட்ட முழுமுதற்பொருளையும் காண முடியும் எனத் துணிவுகொள்ளும் மக்களினத்துக்கு வாய்த்த கருவியாக இருப்பது விஞ்ஞானக் கல்வி என்பதை அறிவுடையோர் மறுக்கமுடியாது. இக் கல்வி வளமுற வளர்ந்திருப்பது மேனாடுகளிலும் அமெரிக்காவிலும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அந் நாடுகளுள்ளும் ருசிய மொழி வழங்கும் ருசியாவும் ஆங்கில மொழி வழங்கும் அமெரிக்காவும் இத் துறையில் முன்னேறியுள்ளன. அதனால், "நாடு என்ப நாடா வளத்தன" என்ற திருக்குறளுக்கொப்பப் பொருள்வளத்தால் செல்வமும் சிறப்பும் சிறக்கப் பெற்றுத் திகழ்கின்றன. ஏனை இங்கிலாந்து, பிரான்சு, செருமனி முதலிய நாடுகளும், கிழக்காசியாவிலுள்ள சப்பான் நாடும் ஓரளவு முன்னேறிப் பொருள்வளம் பெற்றுப் பொலிகின்றன. நமது நாடும் இத் துறையில் முயன்று வருகின்றது. இம்முயற்சியில் நல்ல வெற்றி காண்பதற்கு விஞ்ஞானக் கல்வியும் கலைகளும் நாட்டவர் உள்ளத்தில் நன்கு பரவ வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்த விஞ்ஞானக் கலையும் கல்வியும் நமது நாட்டு மொழிகளில் பெறுதற்கு வாய்ப்பில்லை. இவற்றை அறிந்து கொள்ளுதற்கு இன்று ஆங்கில மொழிதான் சிறந்த வாயிலாக இருக்கிறது. ஆங்கிலமொழி நமது நாட்டிற் பரவக் கால்கொண்டது ஒரு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்புதான். அதனை முதற்கண்புகுத்தியபோது நமது நாட்டை ஆண்டவர் ஆங்கிலேயர்; அவர்கள் தமது ஆட்சியைத் தமக்குத் தெரிந்த மொழியில் நடத்துதற்கு நம் நாட்டு மக்களில் கற்றவரைத் துணைக்கொள்ளவேண்டியவராயிருந்தனர். தாம் சொல்வதை அறிந்து

எழுதவும் சொல்லவும் கூடிய ஆங்கில அறிவு நம்மவர்க்கு உண்டாகும் வகையில் கல்வி முறையை வகுத்தனர். அந்த வழியிலேயே நெடுங்காலம் கழிந்தமையின், அவர்களால் விஞ்ஞான அறிவு பெற்று ஏனை நாடுகளிலுள்ள உரிமை மக்களைப்போல விஞ்ஞானிகளாய் விளக்கம் பெறும் நல்லுதவி நம்மவர் பெறாராயினர். அவர்கள் தந்த ஆங்கில மொழியறிவு பெருகியபோது அரசியல், வாணிகம், நீதிமன்றம் ஆகிய துறைகள் யாவும் ஆங்கில மொழியில் நடைபெறலாயின. கல்வியின் குறிக்கோளும், அரசியல் முதலிய மூன்று துறையிலும் வேலை பெற்று அதனால் எய்தும் ஊதியங்கொண்டு வயிறுவளர்ப்பது என்று மாறுவதாயிற்று. இதற்கேற்ற வகையில் அமைந்த கல்வியும் ஆங்கிலத்தில் நடைபெறத் தொடங்கியது. கற்போர் வேலை எதிர்பார்த்த துறைகளுள் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் தொழிலும் ஒன்றாயிற்று. இவ்வாற்றால் நம் நாட்டில் கற்பதற்கும் வேலை தேடி வயிறு வளர்ப்பதற்கும் உரிய கல்வி ஆங்கிலமே என்ற எண்ணம் மேலிட்டது; நாட்டு மொழிகள் வாழ்க்கைக்குத் துணையாகா என வெறுத்துப் புறக்கணிக்கப்பட்டன.

ஆங்கிலருடைய ஆட்சி நிலைபெறுமுன் தமிழகத்தில் அரசு நிலையின்மையும் போர் அச்சமும் எங்கும் நிலவின; அதனால் மக்களிடை அமைதியான வாழ்வு இல்லாதொழிந்தமையால் வறுமையும் பிணியும் கல்லாமையும் நாட்டில் பெருகியிருந்தன. ஆங்கிலர் ஆட்சி நிலைகொண்டதும் போர் அச்சம் ஒழிந்தது; வாழ்வில் மக்கட்கு ஓரளவு அமைதி தோன்றிற்று. பொருளும் வாணிகமும் தொழில்களும் தொன்றுதொட்டுவந்த முறையில் உயிர்ப்புப் பெற்றன. அது கண்ட மக்கள் அரசினர் மனமகிழத்தக்க வகையில் தங்கள் வாழ்க்கையை நடத்த முற்பட்டனர்; தமக்கென ஒன்று இன்றித் தமக்கு வேண்டுவனவற்றைச் சிந்திப்பதும் அரசினர் செயல் எனத் தேர்ந்து அவர்கட்கு முழுத்த அடிமையாயினர். அரசின் செல்வாக்குப் பெற்றோருடைய சொல்லும் செயலுமே அவர்கட்கு வழிகாட்டியாயின. இடைக்காலச் சோழபாண்டியர் காலத்தில் இல்லாத சாதி வேற்றுமைகள் புது முறையில் தோன்றி மக்களை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்தொழிந்தன. கல்வியும் செல்வமும் செல்வாக்குடையோரிடமே இருந்து வரலாயின.

நாளடைவில் ஆங்கிலர்களுக்குத் தம்மால் ஆளப்படும் மக்களிடையே காணப்படும் கல்லாமை, வறுமை, வேற்றுமைகள் தெரியவந்தன. இந்த மக்களை ஆங்கிலேயரினும் சிறந்த ஆங்கிலப்பான்மையராக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு ஆங்கிலமொழியறிவை முன்னையினும் சிறிது மிகுதியாகப் பரப்ப முயன்றனர். ஆங்கில மொழியிற் காணப்படும் அரசியல், வாணிகம், விஞ்ஞானம் முதலிய கலைகளை நம்மவர்க்கு வழங்கினர். மருத்துவம் பொறியியல் முதலிய கலைகளும் நாட்டுவரலாறு பொருளாதாரம் தத்துவம் முதலியனவும் வந்துபுகுந்தன. இதனால் அவர்கள் ஆட்சியில் கல்விமுறையில் குற்றம் குறைகள் இல்லை என்பது கருத்தன்று. அவற்றால் நமது முன்னேற்றம் தடைப்பட்டது உண்மை; ஆயினும், அவர்பால் பெற்ற நலங்களால், அவருடைய மொழிப் பயிற்சியால், இன்று நாமும் ஓரளவு கலைஞர்களாய் விளங்குகிறோம்.

இத்தனைக்கலைகளும் கலையுணர்ச்சிகளும் நிறைந்து இன்று உலகப் பொதுமொழியாக ஆங்கிலமொழி இடம் பெற்றுவிட்டது. ஆங்கிலரை வெறுப்பவரும் அவர்களுடைய ஆங்கில மொழியின் கலைவளம் கண்டு அதனைப் பெரிதும் காதலித்துக் கற்கின்றனர். அதற்கு அச் சிறப்பு எங்ஙனம் உண்டாயிற்று?

ஆங்கிலருடைய நாடு மேலைநாட்டுக் கடற்கண் உள்ள சிறு தீ[illegible] என்பது யாவரும் அறிந்தது; மேலும் அது குளிர் மிகுந்து, ஓர் ஆ[illegible]டில் பல திங்கள் வெளியே செல்ல முடியாதவாறு பனியுறைந்து கிட[illegible]கும் இயல்பினதாகும். அக் காலத்தே அவர்கள் தங்கள் மனைகளி[illegible] அடைபட்டுக் குளிர் காய்ந்து கொண்டும் தனியே இருந்து சிந்தித்த[illegible] கொண்டும் இருப்பர். இவ் வியல்பால் குளிர்காலத்துக் கெனப்பொ[illegible]ளீட்டுவது அவர்கட்கு இயற்கை வேட்கையாயிற்று. குளிர் காயு[illegible] நெருப்புக்கு விறகு தேடப் புகுந்த சிந்தனை அவர்களை நிலத்தை[illegible] குடைந்து நிலக்கரி காணச் செய்தது; நிலக்கரிக்குப் பின் நீராவி க[illegible]டனர்; புகைவண்டி விடுத்தனர்; இடையிடையே இவற்றுக்கு வே[illegible]டும் கருவிகளையும் படைத்தனர்.

உணவுக்கும் உடைக்குமுரிய பொருள்மேற்சென்ற அவர்கள் விருப்பம், ஏனைப் பெருநாடுகளில் பெறலாகும் பொருள்நலமெல்லாம் தாமும் பெறவேண்டுமென்ற வேட்கையாக மாறிற்று. அதனாற்கடலிற் கலம் செலுத்தி வேறு நாடுகட்குச் சென்று பொருளீட்டும் செயலை மேற்கொண்டனர். வேறு நாடுகட்குச் சென்றபோது அந்நாடுகளில் இயற்கையமைதிகளையும் கால நிலைகளையும் ஆங்கு வாழும் மக்களினத்தின் பண்பாடுகளையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

இவ்வகையால் அவர்களுடைய உலகவறிவும் பொருளறிவும் பெருகவே, போக்குவரவுக்கும் பொருள்செய்தற்கும் வேண்டப்படும் பொருளும் கருவிகளும் மிகுதியும் உண்டாயின. அவற்றால் அவர்களுடைய மொழியிலுள்ள சொற்களும் பலவாய் வளர்ந்து பெருகத் தலைப்பட்டன. அவர்களைப்போலவே அவர்கள் வாழும் கடலின் கரையிலுள்ள நாட்டினரான ஐரோப்பியர் பலரும் பொருள் வேட்கையும் அதுவே வாயிலாக நாடுகாணும் நாட்டமும் கொண்டு கடலில் திரிவாராயினர். அவர்களாலும் பற்பல புதுப்பொருள்கள் காண்டலும் புதுக்கருவிபடைத்தலும் உண்டாயின. நாளடைவில் அவைகள் அவர்களிடையே விரவத் தொடங்கின. இவ்வாறு தோன்றி வளர்ந்ததன் பயனே இன்று நாம் ஆங்கிலத்திற் காணும் கலைப்பெருக்க மாகும்.

வாழ்க்கை நலமும் அதற்கு இன்றியமையாத பொருள்வேட்கையும் கொண்டே வேறு நாடுகட்குச் சென்றாராயினும், தங்கள் நாட்டோடு ஒத்த இயற்கைச் சூழ்நிலை யமைந்த நாடுகளில் குடியேறுவதிலும் அவர்கள் பின்வாங்கவில்லை. நல்லகாலத்தின் குறியாக ஆங்கிலர் நாட்டில் சமயக் கொடும்பூசல் ஒன்று சுமார் நானூறு ஆண்டுகட்கு முன் தோன்றிற்று. வலியார் பலர் எளியாரைத் துன்புறுத்தினர். அவர்கள் கடல் கடந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் குடியேறினர்; இவ்வாறே பலர் ஆப்பிரிக்காவின் தென்பகுதியிலும் ஆத்திரேலியாவிலும் அமரிக்காவின்வடபகுதியிலும் குடியேறி ஆங்கிலம்வழங்கும் நாடுகளை அமைத்துக் கொண்டனர்.

இவ்வாறு நிலவுலகு முற்றும் பொருள் வேண்டியும் இடம் வேண்டியும் திரிந்த ஐரோப்பியர்பால் அரும்பண்பு ஒன்று அமைந்திருந்தது. தாம் தம் இயற்கை யறிவாலும் வாழ்க்கை வாயிலாலும் கண்ட காட்சிகளை எழுதி வைப்பதும் ஒளிவு மறைவின்றிப் பிறர்க்கு உரைப்பதும் ஐரோப்பியரிடம் அந்நாளில் நன்கு அமைந்திருந்த செயல்களாகும். அவற்றோடு தாம்காணும் இயற்கை நலங்களையும், கண்டுபயிலும் மக்களுடைய பண்பு பண்பாடுகளையும் செயல்வகைகளையும் குறித்துக் கொண்டு தம்மோரன்னோர்க்கு வெளியிடுவது யாவர் பாலும் அமைந்திருந்தது.

அவர்கள் நம் நாட்டிற் புகுந்து தங்கியபோது வடமொழியிற்காணப் படும் வேதங்களையும் மிருதிகளையும் உபநிடதங்களையும் பிறவற்றையும் கற்றோரைத் துணையாகக்கொண்டு தமதுமொழியில் பெயர்த்துக்கொண்டனர். கிரையர்சன் முதலியோர் மக்கள் பேசும்மொழிக் கூறுகளைக் கண்டு குறித்தனர். தர்ஸ்டன் முதலியோர் மக்களினத்தின் பல்வேறு பிரிவுகளையும், அவர்களுடைய வாழ்க்கை முறை குணம் செயல் ஆகியவற்றையும் தொகுத்துரைத்தனர். ஹூல்சு முதலியோர் கல்வெட்டுக்களைக் கண்டனர்; மெக்கன்சி முதலியோர் பழங்கால வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுத்து வைத்தனர். சேர்பாட்சிகி முதலிய ருசியர் பௌத்தம் முதலிய சமய தத்துவங்களை ஆராய்ந்து கண்டனர். இவை யாவும் ஆங்கில மொழியின் செல்வங்களாகத் திகழ்கின்றன. இவ்வாறே இந்த ஐரோப்பியர் எந்த எந்த நாடுகட்குச் சென்றா[illegible]களோ, அந்த நாட்டின் இயற்கை நலங்களையும் மக்களினத்தின் பண்பாடு மொழி முதலிய இயல்புகளையும் கண்டும் தேடியறிந்தும் எழுதி வைத்துள்ளனர்.

இம்மட்டோ? நிலவுலகைச் சூழ்ந்துள்ள கடல்களின் இய[illegible] பையும் அவற்றுள் வாழும் உயிர் வகைகள் பறவைக[illegible] முதலியவற்றையும் நிலத்திடை நிற்கும் மலை, காடு, ஏரி குள[illegible] களையும் ஆறுகளையும் ஆங்காங்கு வாழும் பறவை விலங்கு முத[illegible] லிய உயிரினங்களையும் கண்டு அவற்றின் இயல்புகளையும் வெளியிட்[illegible] ள்ளனர். இவ்வாறேதான் நிலம், நீர், நெருப்பு, காற்று முதலியவ[illegible] றின் கூறுகளைக் கண்டாற்போல வனாத்தையும் கண்டு காற்[illegible]

நிலவும் பகுதி, அதன் மேலுள்ள மென்காற் பகுதி, அதற்கு மேலே ஒன்றுமில்லாத வெற்றிடப் பகுதிகளையும், வானத்திற் காணப்படும் நாள் கோள் முதலியவற்றையும் ஆராய்ந்துள்ளனர். இன்னோன்ன செயல் வகைகளால் இன்றைய ஆங்கில மொழி, ஒருவன் நிலவுலகின் அகக்கூறு புறக்கூறுகளையும் அவற்றின் நுட்பங்களையும் இருந்த இடத்திலிருந்து, நேரிற் சென்று கண்டோன்போல இனிது அறிந்து கொள்ளுதற்கேற்ற அறிவுக்கலைக் கண்ணாடியாக உலகெலாம் பரவிய உயர்தனிச் செம்மொழியாக விளங்குகிறது.

இந்த ஆங்கில மொழி போலவே தான் நமது நாட்டிலும் வடமொழி தோற்றம் பெற்றது. ஐரோப்பியர் மொழிக்குப் பேச்சு ஒலியோடு எழுதப்படும் எழுத்தும் இருந்தது; ஆனால் வடமொழியாளருடைய வடமொழிக்கு எழுதுதற்குரிய எழுத்து இலதாயிற்று. அவர்களுடன் தமிழகத்துக்கு வந்தபோது அவர்களது வடமொழி "எழுதாக்கிளவி" யாகவே இருந்தது. அவர்களும் இந்த நாட்டைப் பார்க்க வந்தவர் என்ற பொருள்படத் தம்மைப் பார்ப்பனர் என்றே கூறிக் கொண்டனர். அவர்கள் இன்றைக்கும் வடமொழி யல்லாத ஏனைத் தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் முதலியவற்றைப் "பிரதேச பாஷை" என்று கூறுவதே இதற்குப் போதிய சான்றாகும். தொடக்கத்தில் அவர்கள் ஆறுவகைத் தொழில்களே மேற்கொண்டிருந்தனர். அவை வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்விவேட்டல், வேட்பித்தல், ஓதல் வேட்டல் என்ற இரண்டிற்கும் வேண்டும் பொருளை உடையவரிடம் இரத்தல், ஓதுவித்தல் வேட்பித்தல் ஆகிய இரண்டிற்குமுரிய பொருளை ஈதல் என்று கூறப்படுகின்றன.

> "ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல்
> ஈதல் ஏற்றல் என்று ஆறுபுரிந் தொழுகும்
> அறம்புரி அந்தணர்"

என்று பதிற்றுப் பத்தும், "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம்" எனத் தொல்காப்பியமும் கூறுவது காணலாம். எனவே, அவர்கட்கு உழவு வாணிகம் முதலிய தொழில்கள் இல்லையென்பது தானே பெறப்படும். படவே, அவர்கள் பண்டை நாளில் பொருள் மிகவுடையரான அரசர் சார்பிலும் செல்வர் ஆதரவிலும் வாழ்ந்து வந்தனர். ஏனைய உலகியல் தொழில்களைச்செய்து வாழும் மக்கள் தொடர்பு இல்லாமையால், நெடுங்காலம் வரையில் அவர்களது வடமொழி அவர்கள்

சூழலில் இருந்து வந்ததேயன்றி நாட்டு மக்கள் அறியும் எல்லைக்கு வரவில்லை. வேற்றவர்களான பல்லவர்கள் ஆட்சி நிலை கண்டபோது தான் அரசியற் செப்பேடுகளில் வேந்தர்களின் குடிவரவு கூறும் பகுதியில் வடமொழி இடம்பெறுவதாயிற்று. அவர்கட்குப் பின்வந்த பாண்டியர் காலத்தில் அம்மரபு சின்னாள் இருந்தது; பின்பு தோன்றிய சோழ பாண்டியர் காலத்தில் அவ்வழக்காறு வீழ்ந்து போயிற்று. இன்றும் பல்லவர் அவரையடுத்த பாண்டியர் செப்பேடுகளில் குடிவரவு கூறும்பகுதி வடமொழியிலும், ஏனையாவும் தமிழிலும் இருப்பதைக் காணலாம். அவ் வடமொழிப் பகுதியும் தேவநாகரி என்ற எழுத்தில் உளது; அவ்வெழுத்தும் மராட்டர் மொழிக்குரிய எழுத்துக்களாகும். பிற்காலத்தே புத்தரும் ஆருகதரும் தமிழகம் போந்த போதுதான் தமிழ் எழுத்துக்களைச் சிறிது திரித்து, கிரந்த எழுத்துக்கள் அமைத்துக் கொள்ளப்பட்டன. என்றாலும் மேலைநாட்டு ஐரோப்பியர்களைப் போலவே தாம் சென்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையே வழங்கிய வரலாறுகளையும், பொருள் இடம் முதலியவற்றின் இயல்புகளையும் கண்டும் கேட்டும் தங்கள் மொழியில் பெயர்த்துக் கொள்ளும் இயல்பு வடமொழியாளரிடத்தும் நன்கு அமைந்திருந்தது. அரசர், வணிகர், உழவர், பாணர், கூத்தர் முதலியோரிடம் இருந்த அறநூல், பொருணூல், இசைநூல், கூத்துநூல் முதலிய பலவேறு கலைநுட்பம் கூறும் நூல்களைப் பெற்றுத் தமது வடமொழியில் ஆக்கிக்கொண்டனர். அந்தணர்கட்கு அவை தொழில்கள் அல்லவாயினும் சிறந்த கலைநூல்களைத் தமது மொழியில் பெயர்த்துக் கொள்வது அவர்களுடைய நல்ல பண்பாகும். அவர்கள் எப்போதும் அரசர், குறுநிலத் தலைவர், வணிகர் முதலிய செல்வர் சார்பிலேயே இருந்துவந்ததால் இச் செய கள் அவர்கட்கு எளிதில் இயன்றன. இவ்வாறே செல்வர் அரு வேண்டி நின்ற இயற்புலவர், ஓவியப் புலவர், கோயில்களின் அமை பும் முறையும் கூறும் ஆகமப்புலவர், முதலிய பல்வகைப் புலவர்களி கலை நூல்களும் மருத்துவ நூல்களும் பிறவும் வடமொழியில் மாறி

அரசு நிலையில்லாமையால் நாட்டில் அடிக்கடி நிகழ்ந்த போர்களி பார்ப்பனர் ஒழிய ஏனை யாவரும் கலந்து கொள்ளும் கடமையுடைய அதனால் அவர்களுடைய கலைச்செல்வங்கள் பலவும் வடமொழியா ரிடம் இருப்பது நலம் என்றும் அந்நாளையோர் கருதியிருந்ததி தவறு இல்லை.

மேலைநாட்டு ஐரோப்பியரிடம் காணப்படாத ஒரு தீய பழக்கம் வடமொழியாளரிடம் இருந்தது. ஐரோப்பியர் தாம் கேட்கும் செய்தியும் கற்கும் பொருளும் யாவரிடம் கிடைக்கின்றனவோ அவரையும் அவர்களின் நூலையும் விடாமல் குறிப்பது அவர்கள் வழக்கம். அவர்களுடைய நூல்களைக் காண்போமாயின், "இது இன்னார் கூறியது; இதைக் கூறியவர் இன்ன நூலில் கூறியுள்ளார்" என்பதைத் தவறாமல் குறிப்பர். பின்பு, எந்தப் பொருளேனும் புதிதாகக் காணப்படின், அப் பொருள் காணப்படும் இடத்தே அதற்கு எப்பெயர் வழங்குகிறதோ அதனைத் தங்கள் மொழி யொலிக்கேற்பத் திரித்துக் கொள்வர்; ஊர்ப்பெயர், மக்கட் பெயர் ஆகியவற்றையும் அவ்வாறே திரித்துக் கொள்வது அவர்கள் இயல்பு. வடமொழியாளரோ எனில், அப் பெயரை வடமொழியில் மொழிபெயர்த்து, அவர்களுடையதாகத் தோன்றுமாறு செய்து கொள்வர். விரிஞ்சிபுரத்திலுள்ள இறைவனுக்குப் பழம்பெயர் வழித்துணை நாயனார் என்பது; விருத்தாசலத்துக்குப் பழமையான பெயர் முதுகுன்றம் என்பது; வழி யென்பதை மார்க்க மென்றும், துணை என்பதைச் சகாயம் என்றும் மொழி பெயர்த்து மார்க்க ஸகாயர் என்றும், முதுமை விருத்தம், குன்றம் அசலம்; ஆகவே முதுகுன்றம் விருத்தாசலம் என்றும், வெண்காடன் என்பதை சுவேதாரணியன் என்றும் கூறினர். இவ்வாறே விரிஞ்சிபுரத்துக்கு அண்மையில் ஓடும் பாலாற்றை க்ஷீரநதி யென்றும், அழகர் மலையிலுள்ள சிலம்பாற்றை நூபுரகங்கை யென்றும், அறம்வளர்த்தாள், பெரியநாயகி என்ற பெயர்களைத் தர்ம சம்வர்த்தனி, பிரகந்நாயகி என்றும் மொழிபெயர்த்துக் கொண்டனர். இவ்வாறே சைவத் திருமுறைகளிலும் நாலாயிரப் பிரபந்தங்களிலும் காணப்படும் பல பெயர்கள் வடமொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. வழித்துணை நாயனாரை ஐவே கைடு (Highway Guide) என்றோ முதுகுன்றை குட் ஓல்டு ஹில்லக் (Good old hillock) என்றோ ஆங்கிலரோ வேறு ஐரோப்பியரோ மாற்றியதோ மாற்றுவதோ கிடையாது.

இச் செயலே பல நூற்றாண்டுகளாகச் செய்துவந்தமையின் பிற்காலத்தே வாழ்வில் அமைதி தோன்றியதும் மக்கள் தங்கள் நூல்களை எழுதத் தொடங்கியபோது வடமொழியிலிருந்து பெறவேண்டிய நிலைமை தோன்றிற்று. அப்போது தமிழ்நாட்டுத் தமிழர் ஊர்க்குரிய வரலாற்றை வேறு எவரோ எந்த நாட்டிலோ கூறியதாக வரலாறுகள்

வேறுபட்டலாயின. இசையும் கூத்தும் சமயக்கருத்தும் பிறவும் பழம் பெயர் மறைந்துபோய் வடமொழிப் பெயரால் வெளிவரலாயின.

பின்வந்தோர் உண்மையுணரமாட்டாமல் எல்லாம் வடமொழியிலே உள்ளன; தமிழ் மொழியே வடமொழியிலிருந்து தோன்றியது தான் என்று கூறலுற்றனர். வேள்வி செய்தோர்க்கும் செய்வித்தோர்க்கும் பண்டைநாளில் வேந்தரும் செல்வரும் காமக்காணி என்று சிறப்புப் பெயர் நல்குவது வழக்கம். இடைக்காலக் கல்வெட்டுக்களில் மிகப் பல இதனைக் கூறுகின்றன. இவ்வாறு சிறப்புப் பெயர் பெற்ற சான்றோர் ஒருவர் சங்க இலக்கியத்தில் வருகிறார். அவர் பெயரை ஏட்டில் எழுதினோர் காமக்கணி என்று எழுதிவிட்டனர். அதைக்கண்ட இக்கால அறிஞர் அது காமாட்சி என்பதன் மொழிபெயர்ப்பு என்று எழுதியொழிந்தார். காஞ்சிபுரத்திலுள்ள காமக்கோட்டத்துக் காமாட்சிக்கு அப்பெயர் மிகவும் பிற்காலத்தே உண்டானது என்பது வரலாறு கூறும் உண்மை. இவ்வண்ணமே கோயில்களில் இறைவன்முன் சொல்லப்படும் அருச்சனைகள் பல திருமுறைகளிலும் பிரபந்தங்களிலும் காணப்படும் சிறப்புப் பெயர்களின் மொழிபெயர்ப்பாகவே உள்ளன. இதனால் விளைந்த பயன் என்னை எனில் சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் இருந்து பள்ளிமாணவர் பாடப்புத்தகங்களுக்கு உரை எழுதினோரும் பிறரும் பின்விளைவு கருதாமல் தமிழில் வழங்கும் மணி, நீர், முத்து, சேரி, மீன், பழம் முதலிய யாவும் வடமொழித்திரிபுகள் என்றே எழுதினார்கள்.

உலகில் அறவாழ்வாற் சிறந்த சான்றோர்களைத் தமிழர் கடவுளர் என் பர்; அப்பெயரைத் தெய்வமாகவும் ரிஷிகளாகவும் மொழி பெயர்த் அவர்கள் வரலாற்றுள் பலவற்றைத் தெய்வச்செயல்களாக உரைக் லாயினர். சாதி சமுதாய வேற்றுமைகள் நிலைபெறுதற்கேற்பப் பு ணங்கள் பல வடமொழி வாயிலாகத் தோன்றின. தமிழ் மொழியி காணப்படும் அறவுரைகளும் பொருளுரைகளும் யாவும் வடநூ லிருந்தே தோன்றின என்ற கருத்து நாட்டவர் தெரியவும் மேனாட் வரும் பிறரும் தமிழர்க்கெனத் தனித்த அறிவோ பண்பாடோ சம வொழுக்கமோ இல்லையென உணரவும் உரைத்தனர்; நூல் வடிவி எழுதியும் வந்தனர். ஆங்கில அறிவும், அதன் வாயிலாக வடநூ கருத்துக்களும் வரலாற்றுண்மைகளும் தமிழ்மக்கட்குத் தெரியவ தன; அதனால் தமிழர்களுக்கு வடமொழியால் வெறுப்பு உண்

யிற்று. இவ்வெறுப்பு வளர்தற்கேற்ப மேனாட்டவரும் தமிழரல்லாத பிறரும் இருமொழியும் பயின்று பெற்ற அறிவால் வடமொழியிலுள்ள வரலாறுகள் பலவும் புளுகு குப்பைகள் ("A farrago of legendary nousense"—William Logan) என்று திட்டவட்டமாகக் கூறுவாராயினர். இதற்கிடையே நல்லகாலமாக மொழிநூல்நெறி (philology) தோன்றிப் பொய்யான கருத்துக்களை மறுத்துவிட்டது. உண்மை ஒளிவிட்டுத் திகழ்வதாயிற்று.

இப்போது நமது இந்தியப் பேரரசு வடமொழிப் பல்கலைக் கழகங்களை நிறுவி வடமொழியை நாட்டில் பரப்ப முயலுகின்றது. வடமொழியை யாவரும் எளிதில் கற்பதற் கேற்ற வழிமுறைகளை ஆராய்தற்கென அறிஞர் குழு ஒன்றை அமைத்துள்ளனர். இப்போது பரவியுள்ள வட நூலறிவே வடநூற்கட்குள் புதைந்து மறைந்துகிடக்கும் தமிழ்ச் சொற்கள் கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் காட்டி வருகிறது; வடநூல் அறிவு நாட்டில் பலரும் அறியப் பரவுமாயின் மேலே கூறிய தமிழ் வரலாறுகளும் உண்மைகள் பலவும் மக்கட்குத்தெரிந்துவிடும். அவ்வந் நாட்டு மொழிகள் தத்தம் தனியியல்பை யுணர்ந்து தழைத்து வளரத் தலைப்படும். வடமொழியின் துணையில்லையாயின் வளம்பெறா என உரைக்கப்படும் பொய் யடிமையிலிருந்து நீங்கி அவைகள் உரிமையும் சிறப்பும் பெற்று உயர்வு பெறும். நீதிமன்றங்களில் நிலவும் சட்டங்களில் புகுத்தப்பட்டிருக்கும் வழக்குக்கு ஒவ்வாத கருத்துக்கள் பலவற்றின் புன்மை நாட்டுமக்களுக்கு நன்குவிளங்கும். ஆதலால், நமது பேரரசு வடமொழி பரவுதற்குச் செய்யும் இந்த முயற்சி தமிழர் பெரிதும் பாராட்டற் குரியதாகும். வடமொழியை யாவரும் படிக்கச் செய்யும் வகையில் கல்வியாளர்கள் அதனை ஆங்கில மொழிக்குரிய இடத்திலோ, நாட்டு ஆட்சிக்குரிய தமிழ் முதலிய வட்டார மொழிகளுக்குரிய இடத்திலோ வைப்பது கால நிலைக்கும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஒத்ததாகாது. தமிழ்நாட்டுக்குரிய தமிழ் உலகியலுக்குரிய ஆங்கிலம் என்ற மொழிகளைப் போல, வடமொழி இன்றைய வாழ்க்கைக்குப் பயன்படும் தகுதி யுடையதன்று. அதனால் அதனை மூன்றாவது மொழியாக நிறுத்திப் பலரும் எளிதில் பயின்று மொழிநலம் பெறச் செய்வதுதான், நாட்டின் எதிர்கால அறிவு நலத்தை எண்ணும் நல்லறிஞர் ஒவ்வொருவர்க்கும் கடனாகும்.

---

# சிலப்பதிகாரம்—கானல் வரி

பண்டித-வித்துவான், தி. சங்குப்புலவர், கணக்காயர், செந்தமிழ்க் கல்லூரி,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

## முன்னுரை

"கூடலார் கொண்டாடுஞ் செஞ்சொற் குடக்கோ முனிசேரன்" எனப் பாடலாற் பாராட்டப்பட்ட இளங்கோவடிகள், புலவருலகத்திற்குச் செந்தமிழ்ப் பெரு விருந்தாக அளித்த சிலம்புச் செல்வத்திற் கலப்புச் செல்வமாகக் காணப்படுவன சில. அடிகள் சிலப்பதிகாரத்தை மூன்று காண்டங்களாக வகுத்தார். முப்பதாகவிரித்தார். கதை எனப்பெயர் தந்தார்பல பகுதிகட்கு. சிலபகுதிகட்குப் பாடல் எனவும், வரிஎனவும், குரவை எனவும் மாலைஎனவும் பெயரிட்டார். காதை என்பது கதைநிகழ்ச்சி எனவும்,மற்றவை இலக்கியச் சுவைக்காக இடையிடையே விரித்த ஒவ்வோர் நிகழ்ச்சி எனவும் உய்த்துணரலாம் நாம். அவை மங்கல வாழ்த்துப் பாடல், கானல்வரி, வேட்டுவவரி, ஊர் சூழ் வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, துன்பமாலை, வஞ்சினமாலை என்ற பகுதிகளே. இவை யாவும் கலப்புச் செல்வமாக நமக்குக் காட்டினர் அடிகள். இவற்றுட் கானல்வரி என்பதும் ஒன்று. கானலைக் குறித்துப் பாடிய இசைப் பாட்டு என்பது அதன் பொருள்.

"வரிப்பாடல்" என்பது பண்ணும், திறமும், செயலும், தாளமும் ஒரு நெறியின்றி மயங்க, எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு, இயல்பும் முடமுமாக முடிந்து, கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வஞ்சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்" என உரையாசிரியர் உரைத்திருப்பதால் உணரலாம். இது மக்களைச் சுட்டிய வரிப்பாட்டு எனச் சொள்ளல் வேண்டும். பண்டைக் காலத்தில் ஓர் ஆடவன் தான் ஓர் மங்கை மீது காதல்கொண்டதாகப் பாடுவதும், ஒரு மங்கை தான் ஓர் ஆடவன் மீது காதல் கொண்டதாகப் பாடுவதும் அப் பாடல்கள் பலதுறை யமைந்திருக்கும்படி பாடுவதும் உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் ஒப்ப முடிந்த செயலாகும் என்பதை இக் கானல்வரியாற் காணலாம். இன்றும் அங்ஙனம் பாடும் பாடல்கள் நமது நாட்டிற் பல்வேறு பெயர் பெற்று இசைப் பாடலாக வழங்குவன காண்கின்றோம். இக் கானல் வரிப்பாடல்கள் எல்லாம் சொற்சுவை, பொருட்சுவை, உள்ளுறை

உவமை, பல அகப்பொருட்டுறை அமைந்து புலவர்போற்றுஞ் சொல்லோவியமாகத் திகழ்கின்றன. இவற்றின் கருத்துக்களையும், துறைகளையும், உள்ளுறைகளையும் விளக்கிச் சொல்வதுதான் இக்கட்டுரை.

### கானல்வரி பாடிய காலம், களன், காரணம்.

எழிலாலும் இசையாலும் இவ்வுலகில் வேறெவரும் இணையாகார் எனப் பெயர்பெற்ற கோவலனும் மாதவியும், இந்திரவிழா நிகழ்ச்சியின் இறுதியிற் கடலாடச் சென்று நீராடிக் கடற்கரையின் மடல்விரிந்த தாழை வேலியாகச் சூழ்ந்த புன்னைமரத்து நீழலின், மணற் பரப்பிற், சித்திரத்திரைவளைத்த சூழலில், யானைத்தந்தத்தாற் சமைத்த கட்டிலின்மேல் விளையாடி வீற்றிருந்தனர். வசந்தமாலை என்ற பாடகி தன் கையில் ஓர் யாழ் வைத்துக்கொண்டு அருகில் நின்றாள். மாதவி அவ் யாழினைத் தடவிப் பண்ணல், பரிவட்டணை முதலிய எட்டுவகைத் தொழிலால் இசையெழுப்பினள். வார்தல், வடித்தல் முதலிய எட்டுக் கரணங்களாலும் இசை நுட்பத்தை யாய்ந்தாள். யாழைச் சீர்செய்து திருத்தினாள். கோவலன் கையிற் கொடுத்தாள். கொடுக்கும்போது "நான் உங்கள் ஏவலின் வழிநிற்பவள், எனக்குப் பணி யாது? கூறுக" என்று சொல்லிக் கொடுத்து அவன் அருகில் அமர்ந்தாள். கோவலன் மாதவியின் குறிப்பை யறிந்தான். யாழைமீட்டி இசை பாடத் தொடங்கினான். அக்காலப் பாடல்களாகிய வரிப்பாட்டுப் பல பாடி மாதவியை மகிழ்விக்கக் கருதினான். அவன் பாடிய பின்னர் மாதவியும் அவனைப் போலவே வரிப்பாட்டுப் பாடினள். இவ் விருவர் பாடல்களுமே கானல்வரி எனப் பெயர்பெற்றன. ஆற்றுவரி, சார்த்துவரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணைநிலைவரி எனப் பல வரிப் பாடல்கள் இருப்பினும் சிறப்புப் பற்றிக் கானல்வரி எனப்பெயரிட்டார் ஆசிரியர். இனி வரிப்பாடலின் பொருளும் நயமும் காண்போம்.

### ஆற்றுவரியின் பொருள் விளக்கம்

(1) கோவலன் காவேரியை நோக்கிக் கூறுகின்றான்:-காவேரி என்னும் பெயர்பெற்ற கற்புடைய நங்கையே! கெண்டைமீன்களாகிய கண்களையுடைய மங்கையே! நிறைநிலாப் போன்ற வட்டமாகிய வெள்ளைக் குடையுடைய சோழ மன்னன் ஆகிய உன் கணவன் உன்னை முதலில் மணந்தான். பின்னையும் அரசு புரிந்து கங்கை என்னுங் காரிகையையும் புணர்ந்தான். அங்ஙனம் அவன் கங்கையைப் புணர்ந்த செயல் அறிந்தும் அவனோடு பிணங்காது இணங்கிக் கூடி மகிழ்ந்து இன்பந் தந்து வாழ்கின்றாய். இவ்வாறு வாழ்வது

தான் மங்கையர்க்குப் பெருமையைத் தரும் கற்புநிலையாகும் என்பதை யான் அறிந்தேன்; இவ்வாறே நெடுங்காலம் வாழ்வாயாக. காவேரியே! என வாழ்த்தினன்.

(2) பின்னும் கோவலன் காவேரியை நோக்கி, "நிலைபெற்ற முத்துமாலை புனைந்த வெண்கொற்றக் குடையுடைய சோழனாகிய உன் கணவன் நெறி வழுவாது தன் ஆணையைச் செலுத்தி அரசு புரிந்து கன்னி யென்னும் பெண் மணியையும் புணர்ந்தான். அதனை நீ அறிந்தும் அவனோடு ஊடாமற் கூடி யின்பந் தந்து வாழ்கின்றாய்! இங்ஙனம் கணவருடன் வாழ்வதுவே நிலைபெற்ற பெருமை தங்கிய கற்புநிலையாகும் என்பதை நான் அறிந்தேன்; நீ வாழ்வாயாக" என்றான்.

(3) பின்னும் கோவலன் காவேரியை நோக்கி "உழவர்கள் ஒருவரோடு ஒருவர் நீர்ப்பெருக்கைக் கண்டு மகிழ்ந்து பேசுகின்ற ஒலியும், மதகுகளில் நீர் பெருகி யுடைந்து ஓடுகின்ற ஒலியும், அணைகளை யுடைத்துச் செல்லும் ஆரவாரமும், புதுப்புனலிற் குடைந்து மூழ்கி நீராடுகின்ற மள்ளர் மள்ளியருடைய பேச்சு ஒலியும், கூடி நிறைந்து பேரொலியாகக் கேட்கும்படி நீ செல்கின்றாய் காவேரியே! இவ்வாறு நீ செல்வதற்குக் காரணம் யாது என ஆய்ந்தேன். எதிரே நின்று வாய் சாவாமல் வீரம் பேசுகின்ற மழவர்களைத் தன்னிடத்தே கொண்ட சோழ மன்னனது செல்வப் பெருக்கமே என்று தெளிந்தேன்; காவேரியே வாழ்க" என்றான். ஆற்றுவரியாகிய கவிகள் மூன்றும் இங்ஙனம் பொருளமைந்திருக்கக் காண்கின்றோம். இஃது வெளிப் பொருள். உட்கருத்தை யுய்த்துணர்வோம்.

## ஆற்றுவரிக் கவிகளின் உட்கருத்து

கோவலன் தன்னாட்டு மன்னன் ஆகிய சோழனை வாழ்த்துவது முறையாதலாற் கானல்வரிப் பாட்டுத் தொடக்கத்தில் அம் மன்னன் சிறப்பிற்குக் காரணமாகிய காவேரியாற்றை வாழ்த்தினான். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவேரியாறு நீர்வளம் நிறைந்து சீர்பெற விரைந்து ஓர் நெறியாக ஓடுகின்றது. அந் நீர்பாயும் நாடு புனனாடு எனப் பெயர் பெற்றுச் சோழமன்னன் ஆட்சிக்கு உரியதாக அமைந்திருக்கிறது. அந் நாட்டு மக்கள் பசியும் பிணியும் பகையும் இன்றி வாழ்கின்றனர். அவ்வாறு வாழ்வதால் அம் மன்னன் புகழ் பல நாட்டிலும் பரவிற்று. வீரத்திற் சிறந்த வேந்தன் என விளங்கினன், வடக்கின்கண் உள்ள பல நாடுகளும் அவன் ஆணைவழியடங்கி

நடந்தன. இமய முதற் குமரி வரையுள்ள குறுநில மன்னர் யாவரும் அவனுக்குத் திறைகொடுத்துப் பணிந்துவாழ்ந்தனர். ஆதலாற் கங்கைநதி பாயும் வடநாடுகளும் கன்னி நதிபாயும் தென்னாடுகளும் அவனுக்கு உட்பட்டன. சோழநாடு எவ்வாறு உரிமையாயிருந்ததோ அதுபோல ஏனை நாடுகளும் உரிமையாயின. பெருநிலப் பரப்பை ஆள்கின்ற மன்னனாகச் சோழன் இருந்தான். தனது நாட்டினை மட்டும் ஆய்ந்து அரசு செலுத்த இல்லாத நிலைமையை யடைந்தான். அங்ஙனம் இருந்தாலும் காவேரி வளம் பெருகி ஓடுவதால் ஒரு குறையும் இன்றி அந் நாட்டு மக்கள் செழித்து வாழ்கின்றனர். சோழ நாடும் புகழ்பெற்று விளங்குகிறது. எக்காலமும் காவேரியாறு இவ்வாறே நீர்பெருகி யோடிப் பாய்ந்து வளம்பெறச் செய்யவேண்டும் என்பதே உட் கருத்தாகும். ஆற்றுவரிக்கவிகள் மூன்றையும் அடியில் வரைகின்றேன். அவைகள் காவேரி செல்வது போலவே ஒழுகிய வோசையும் விழுமிய பொருளும் அமைந்து சொல்லின்பம் பொருளின்பம் தந்து பரந்து செல்வதைப் படித்துக் காணுங்கள்.

## ஆற்றுவரி (முகமுடைவரி)

திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா திருத்தல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன்வாழி காவேரி (1)

மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி (2)

உழவ ரோதை மதகோதை உடைநீரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி. (3)

# போக்குவரத்து முன்னேற்றம்

## சாலைகள் (ரஸ்தாக்கள்)

N. பாலுசாமி, M. A. மதுரை.

ஒரு நாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கையில் சாலைகளுக்குத் தனியிடம் உண்டு. பழங்காலத்திலேயே சாலைகளின் அவசியத்தை மக்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். மக்களின் தேவைகள் பெருகியுள்ள இக்காலத்தில், அவற்றின் அவசியம் மிகவும் அதிகரித்துள்ளது. சாலைகள் குறைவாகவும், செப்பனிடப்படாமலும் இருந்தால், அது சமுதாயத்தின் பிற்போக்குத் தன்மையையும் வளர்ச்சியின்மையையும் காட்டும். ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்தைக் காட்டுவன நல்ல சாலைகளே ஆகும். போதிய சாலைகள் இல்லாத நாட்டில் பொது மக்கள் மிக்க துன்பம் அடைவார்கள். சமுதாயத்தின் இரு கண்களாக விளங்கும் உழவும், தொழிலும் நன்கு செழிக்க, நல்ல சாலைகள் வேண்டும். கிராம மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். அம் மக்கள் உரிய காலத்தில் தங்கள் நிலத்தை உழுது, உரமிட்டுப் பண்படுத்திப் பயிர் செய்வதற்கு வேண்டிய உரம், விதை முதலியவற்றை நகரங்களிலிருந்து கொண்டுவருவதற்கு நல்லசாலைகள் வேண்டும். அப்பொழுது தான் பொருள் உற்பத்தி பெருகும். மேலும், மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை, வண்டிகளிலும், மோட்டார் வாகனங்களிலும் ஏற்றித் தூரத்திலுள்ள நகரங்களுக்கும் சந்தைகளுக்கும் உடனே கொண்டுபோய் விற்கவேண்டுமானாலும் நல்ல சாலை அமைப்புக்கள் வேண்டும்.

காய்கறிகள், கீரை, பால், பழங்கள் முதலியன கிராமங்களிலேயே அதிகம் கிடைக்கின்றன. இப் பொருள்கள் எல்லாம் கெட்டுப் போகாமல் உடனே பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுவதற்கும் சாலைகள் மி

வும் அவசியம். ஆகவே, நாட்டின் உயிர்நாடியான விவசாயம் வளர்ச்சியடையவும், விவசாயிகள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையவும் சாலைகள் மிகவும் அவசியம். பொருள்களின் விலை நாடெங்கும் ஒரே மாதிரியாக இருப்பதற்கும் சாலைகள் உதவுகின்றன. நகரங்களையும், கிராமங்களையும் இணைக்கும் சாதனங்களும் சாலைகளே. இந்த இணைப்பால் கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் மறையும். கிராம மக்களிடையே புத்துணர்ச்சியும் நாகரிக வளர்ச்சியும் ஏற்படும். மேலும் ஒரு நாட்டின் தொழில்வளமும் அந் நாட்டில் உள்ள சாலைகளைப் பொறுத்தே அமைகின்றது. ஓரிடத்தில் கிடைக்கும் மூலப் பொருள்களை மற்றோரிடத்தில் உள்ள தொழிற் சாலைக்குக் கொண்டுசெல்வதற்குச் சாலைப் போக்குவரத்து மிக அவசியம். நகரங்களிலேயே தொழிற்சாலைகள் எல்லாம் குவிந்துவிடாமல் கிராமப்பகுதிகளிலும் பரவலாக அமைவதற்குச் சாலைகள் பெருந்துணை செய்கின்றன.

நாட்டின் சில பகுதிகளில் இயற்கைக் கோளாறுகளால் பஞ்சம் ஏற்படுகின்ற காலத்திலும் பெருமழை, புயல் முதலியவற்றால் எதிர்பாராத முறையில் அழிவுகள் ஏற்படுகின்ற காலத்திலும், அங்கு வாழும் மக்களுக்கு உடனே உணவுப் பொருள்களை அனுப்பி உதவி செய்வதற்கு ஏற்ற சாலைகள் வேண்டும்.

இனி, நாட்டுப் பாதுகாப்புக்கும் நல்ல சாலைகள் அவசியம் வேண்டும். உள்நாட்டுக் கலகங்களையும் குழப்பங்களையும் பரவ விடாமல் தடுப்பதற்குச் சாலைகள் உதவுகின்றன. போர்க் காலத்தில் பல்வேறு இடங்களிலிருந்தும் படைகளை வருவிப்பதற்குச் சாலைகள், பெரிதும் பயன்படுகின்றன. புகைவண்டிப் பாதைகள், விமானப் பாதைகள் ஆகியவற்றைவிடச் சாலைகளே ஒரு நாட்டின் அடிப்படைத் தேவையாகும். இதுவரை கூறியவற்றால், விவசாய வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், நாட்டுப் பாதுகாப்பு, கிராம இணைப்பு, விலை ஏற்றத் தடுப்பு ஆகியவற்றிற்குச் சாலைகள் பெரும் துணைபுரிகின்றன என்பதைக் கண்டோம்.

இனி, சாலைகளின் வரலாற்றையும் வளர்ச்சியையும் சிறிது கவனிப்போம். இந்தியாவில் மிகப்பழங்காலத்திலேயே நல்ல நகர அமைப்புக்களும் வீதி அமைப்புக்களும் இருந்துள்ளன என்பது புதைபொருள் ஆராய்ச்சியால் நன்கு விளங்குகிறது. சிந்துநதிக் கரையிலும், பஞ்சாப்பிலும் மண்ணுக்குள் மறைந்து போன மொகஞ்சொதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களை அகழ்ந்து பார்த்தபொழுது, வியக்கத்தக்க தெருக்களும், கழிவுநீர்க் கால்களும் அக் காலத்தில் அமைந்திருந்தன என்பது தெரியவந்தது. தமிழ் நாட்டிலும், மதுரை வணிகர் வீதிகளின் அமைப்பும், அரசர்கள் தேரேறி, நகர்வலம் வருவதற்கு அமைந்த தனி வீதிகளின் அமைப்பும், தமிழ் இலக்கியங்களில் பாக்கக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் உலகச் சந்தையாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் அகநகர், புறநகர் என்ற இரு பகுதிகளும் அகன்ற சாலைகளும், சந்திகளும், சதுக்கங்களும் அமைந்திருந்தன என்பது சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களால் தெரிய வருகிறது. மேலும், தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் வாழ்ந்த பரதவரும் உமணரும் மீன், உப்பு முதலிய பண்டங்களை, உள்நாட்டு ஊர்களில் வாழும் உழவர்களுக்குக் கொடுத்து அவற்றிற்கு மாறாக, நெல் முதலிய கூலங்களைப் பெற்று வாழ்க்கை நடத்தினர் எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு ஓரிடத்தில் விளைந்த பொருள்களைத் தூரத்திலுள்ள மற்றோர் இடத்திற்கு வண்டிகளில் ஏற்றிச் சென்று பண்டமாற்றச் செய்து வருதற்கு ஏற்ற சாலைகள் அக் காலத்திலும் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவு. பண்டைக் காலத்தில், சோழர் தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கடல் வழியாகக் குதிரைகளும், தரைவழியாக மிளகு மூடைகளும் வந்து குவிந்ததோடு, வட மலையில் விளைந்த பொன்னும் மணியும், மேற்குத் தொடர்ச்சி மலையில் கிடைத்த அகிலும் சந்தனமும், தென்கடல் முத்தும், கீழ்கடல் பவளமும், கங்கைச் சமவெளிக் கோதுமையும், காவிரியாற்று நெல்லும், இலங்கையிலிருந்து உணவுப் பொருள்களும் மிகப்பெரிய அளவில் வணிகர்களால்விற்பனை செய்யப்பட்டன என்பது பட்டினப்பாலை என்ற சங்க நூலால் தெரிகிறது. சீனநாட்டு வழிப்போக்கர் எழுதி

வைத்த குறிப்புகளிலும் தமிழ்நாட்டு வணிகம் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, பல்வேறு கடற்பாதைகளும், தரைப்பாதைகளும் பழங்காலத்திலேயே மக்களால் கண்டுபிடிக்கப் பட்டு இருந்தன என்பது தெளிவாகும். மேலும், தமிழ்நாட்டின் முப் பெரும் தலைநகரங்களாக விளங்கிய வஞ்சி, மதுரை, காவிரிப்பூம்பட்டி னம் ஆகியவற்றை இணைக்கும்படியான நெடிய சாலைகள் அரசர்களால் அமைக்கப்பட்டிருந்தன எனக் கருத இடமுண்டு. காவிரிப்பூம்பட்டி னத்திலிருந்து, மதுரைக்குக் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடி களை வழித்துணையாகக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் வரும் பெரும் வழியை வருணிக்கும் இளங்கோவடிகள் அதனை 'நெடும் பேரத்தம்' என்ற தொடரால் குறிக்கின்றார். இத்தொடர் இக் காலத்து 'Grand Trunk Road' என்பதனோடு ஒப்பிடத்தகும். இத னாலும், பழங்காலத்து மக்கள் சாலை அமைப்பு உணர்ச்சிகொண்டிருந் தனர் என்பது தெளிவாகும். ஆனால், அக் காலத்துச் சாலைகள் இக் காலத்தவை போன்று பெரும் பெரும் மோட்டார் வாகனங்கள் செல் லத் தக்க நிலையில் அமைந்திருக்கவில்லை. நாகரிக வளர்ச்சியும், மக்க ளின் தேவை உணர்ச்சியும் காலத்திற்குக் காலம் மாறுபடும் அல்லவா? எனவே விஞ்ஞானப் பண்பாட்டில் வளரும் இக்காலத்து மக்களின் முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு புத்தம்புதிய சாலைகள் அமைக்கப் படல் வேண்டும்.

இனி, இந்தியாவில் மொகலாயர் ஆட்சி நடந்த காலத்தில் சில பெரியசாலைகள் அமைக்கப்பட்டன. முகமதுதுக்ளக், ஷெர்சா, அக்பர் முதலிய அரசர்கள் தத்தம் தலைநகரங்களைப் பிறநகரங்களோடு இணைப் பதற்கு வேண்டிய சாலைகளை அமைத்தனர். ஆனால், அச் சாலைகள் எல்லாம் பெரும்பாலும் அரசியல் காரியங்களுக்காகவே அமைக்கப் பட்டன. பின்னர் கம்பெனியார் ஆட்சியில் அமைந்த சாலைகளும் கம் பெனிப் படைகளின் போக்குவரவுக்காகப் பெரிதும் பயன்படுத்தப் பட்டனவேயன்றி, மக்களின் வாழ்க்கை நலனை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படவில்லை. கம்பெனி ஆட்சியின் கடைசிக்

காலத்தில், அதாவது 1885-இல் முதல்முதலாகச் சாலைப் போக்கு வரவைக் கவனிப்பதற்குப் போது அலுவல் துறை ஒன்று அமைக்கப் பட்டது; அதுதான் இக் காலத்தில் மராமத்து இலாகா என்று அழைக்கப்படுகிறது. இந்தியா நேரடியாக இங்கிலாந்துப் பாராளு மன்றத்தின் ஆட்சிக்கு வந்த பின்னரே, முறையான சாலைவளர்ச்சி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அப்பொழுதும் புகை வண்டிப் பாதைகளிலேயே மிக்க கவனம் செலுத்தப்பட்டதால் சாலை வளர்ச்சி பேரளவு பாதிக்கப்பட்டே வந்தது. பின்னர், இரண்டு உலகப் போர்களாலும் போக்குவரவு வசதிகள் வளரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவில் போக்கு வரவுச் சாதனங்கள் பிற நாடுகளைக் காட்டிலும் குறைந்து போனதற்கு மிக முக்கியமான காரணம் நீண்ட கால அயலார் ஆட்சியே யாகும்.

1947-ஆம் ஆண்டு இந்தியா விடுதலை யடைந்தது. உடனே நமது அரசாங்கம் பல முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டது. போர்ப் பிற் கால வளர்ச்சித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. சாலை வளர்ச்சித் துறையில் அரசாங்கம் நாகபுரித் திட்டத்தை ஆரா யத் தொடங்கியது. இத் திட்டம் 1943-ஆம் ஆண்டு நாகபுரியில் கூடிய மாகாண எஞ்சினியர்களால் வகுக்கப்பட்டது. இதன்படி நாட் டிலுள்ள சாலைகள் நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன. அவை தேசீய நெடும் சாலைகள், மாகாண நெடும் சாலைகள், மாவட்டச் சாலை கள், கிராமச் சாலைகள் எனப்படும். இத் திட்டம் சாலையமைப்பில் மத் திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கடமைகளையும் வரையறுத்தது. பத்தாண்டுகளுக்குள் மக்களுக்கு வேண்டும் எல்லாச் சாலைகளையும் அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இனி முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் சாலைகளுக்கு உரிய இடத் தையும், இதுவரை நிறைவேறியுள்ள சாலையமைப்பு வேலைகளையும் கவனிப்போம். முதல் ஐந்தாண்டு செலவிடப்படும் இத் திட்டத்தில்

படி, தேசிய நெடுஞ்சாலைகளை மத்திய அரசாங்கமும், மாகாண நெடுஞ்சாலைகளை மாகாண அரசாங்கங்களும், கிராமச் சாலைகளை கிராமப் பஞ்சாயத்துக்களும் மேற்பார்த்து வரும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குமுன் இந் நால்வகைச் சாலைகளின் மொத்த நீளம் இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் மைல்கள் ஆகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய சாலைகளை அமைப்பதற்கும் பழைய சாலைகளைப் புதுப்பிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டகாலத்திற்கு முன்னர், அரைகுறையாக விடப்பட்டிருந்த சாலைவேலைகளும் மேற்கொள்ளப்படும். மேலும் 925 மைல் நீளமுள்ள புதிய சாலைகள் அமைக்கப்படும். 68 பாலங்கள் கட்டப்படும். பல பழைய பாலங்கள் புதுப்பிக்கப்படும். 3000 மைல் நீளமுள்ள பழைய சாலைகள் செப்பனிடப்படும். இவையே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்கள்.

இத்திட்டத்திற்குரிய செலவில் சுமார் 32 கோடி ரூபாய் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும். எஞ்சிய தொகையை மாகாண அரசாங்கங்கள் ஏற்கும். இத்திட்டத்தின் மூன்றில் இரண்டு பகுதி 1956-ஆம் ஆண்டுக்குள் முடிவடையும்.

இனி, இத்திட்ட வேலைகள் எந்த அளவு நிறைவேறியுள்ளன என்பதைப் பார்ப்போம். தேசிய நெடுஞ்சாலைகளின் முன்னேற்றம் மிகவும் பாராட்டத்தக்க அளவில் உள்ளது. 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய, அதாவது திட்டம்தொடங்கிய மூன்றரை ஆண்டுகளில் 330 மைல் நீளமுள்ள புதிய சாலைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 25 பெரிய பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. சுமார் 2,500 மைல் நீளமுள்ள பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இத்துறையில் மாகாண அரசாங்கங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. பிறமாகாணங்களைக் காட்டிலும் இவ் வேலை மிகச் சிறந்தமுறையில் நமது சென்னை மாகாணத்தில் நிறைவேறியுள்ளது. இந்தியா முழுதும் உள்ள சாலைகளின் சராசரி

அளவைவிட, சென்னை மாகாணத்தில்தான் இரண்டு பங்கு அதிகச் சாலை வளர்ச்சி இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நமது மாகாணத்தில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் சுமார் 29000 மைல்கள் ஆகும். இவற்றில் தேசீய நெடுஞ்சாலைகளின் நீளம் சுமார் 1000 மைல்கள். மாகாண நெடுஞ்சாலைகள் சுமார் 1700 மைல்கள். மாவட்டப் பெரிய சாலைகள் 9000 மைல்கள். மராமத்து இலாகாவின் மேற்பார்வையிலுள்ள சாலைகள் சுமார் 600 மைல்கள். நகரசபைகளின் கவனத்தில் உள்ளவை சுமார் 2000 மைல்கள். இவை தவிர, சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பாலங்களின் வேலை இப்பொழுது நடைபெற்றுக் கொண்டுள்ளது. இதுவரை கூறியவற்றால், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சாலைகளின் வளர்ச்சி நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது என்பது தெளிவாகும். இத்தகைய முன்னேற்றத்திற்குக் காரணம் அரசாங்கத்தின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், ஒத்துழைப்பும், மன உறுதியுமே ஆகும்.

எந்தத் திட்டமும் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் வெற்றி பெறும். இதனைக் கருத்தில் வைத்தே நமது அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தைச் சமுதாய நலத்திட்டம், தேசீய விரிவுத் திட்டம் என்ற இருபிரிவுகளின் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்குப் பொதுமக்கள் பணத்தாலும் உழைப்பாலு[ம்] மனமுவந்து உதவுவது மகிழ்ச்சிக்கு உரியதாகும். தேசீய விரிவு[த்] திட்டத்தின்கீழ் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் பயன்பெ[று]மாறு செய்யப்படும். இவ் விரிவுத் திட்டம் நாடு முழுவதும் பரவி[ய]பின், சமுதாய நலத் திட்டம் எல்லாப் பகுதிகளிலும் நிறைவேற்ற[ப்]படும். இத் திட்டங்கள் நிறைவேறுமானால் போக்குவரவுச் சாதன[ங்]களேயன்றி, எல்லா வாழ்க்கை வசதிகளும் மக்களுக்குக்கிடைக்கு[ம்]. நம்நாடு பொருளாதார சமத்துவம் பெற்று உலகநாடுகளோடு சரிநி[கர்] சமானமாகத் திகழும்.

# *இலக்கிய நண்பர்கள்

கதி. சுந்தரம்.

## அன்றில்

மனிதன் இயற்கையின் ஒரு கூறு. ஏனைய விலங்கு, பறவை முதலிய இயங்கு திணைப் பொருள்களும் மலை ஆறு முதலிய நிலைத்திணைப் பொருள்களும் இயற்கையின் கூறுகளேயாம். மனிதன் இந்த இரண்டு திணைகளையும் கொண்டு தன் மனஉணர்வினை வளர்ச்சி செய்துகொள்கிறான். ஆனால் அவைகளோ மன உணர்வின்மையால் இயற்கையால் படைக்கப்பட்டது போலவே என்றும் ஒரு தன்மையவாய் இருக்கின்றன. மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து, இயற்கையின் சூழலில் தன்னுடைய வாழ்க்கையாகிய நாடகத்தை நடித்து, இறுதியில் இயற்கையோடுகலக்கின்றான். இயற்கை மனிதனுடையவாழ்க்கைக்கு உதவி செய்கின்றது என்பதை மற்ற எல்லோரையும் விட, கவிஞனே நன்கு உணர்கின்றான்.

கவிஞன்கூறும் கற்பனை பொய்யுரை அன்று; புனைந்துரை ஆகும். பொய்யுரை என்னில் உண்மையை மறுத்தலாம், புனைந்துரை என்னில் இருக்கின்ற உண்மையினை மக்கள் மனத்தில் பதியுமாறு சுவைபட மிகுத்து உரைத்தலாம்.

மன உணர்வுடைய மனிதன் ஏனைய விலங்கு, பறவை முதலிய மன உணர்வில்லா நண்பர்களோடு உறவாடி, தான் சொல்ல வேண்டிய கருத்தினை விளக்கமுற எடுத்தியம்ப விழைகின்றான். இந்த நண்பர்களின் உதவியின்றெனில் கவிஞன் தன் கருத்தை மக்கள்மனத்தில் பதியுமாறு எளிதாக எடுத்தியம்ப இயலாது.

வண்டு, தும்பி, கிளி, குயில், கோட்டான், குருகு, காகம், கழுகு, அன்றில் முதலிய பறவைகளை நுனித்து அறிந்து, அவை அறிவுறுத்

---

* 7—2—57-ஆம் நாள் திருச்சி நிலயத்தில் ஒலி பரப்பப்பெற்றது.

தும் செய்திகளாகக் கவிதைகள் பலவற்றைப் புலவர்கள் நமக்கு யாத்துத் தந்துள்ளனர்.

அன்றில் பனைமரத்தில் உள்ள மடலில் கூடுகட்டி, பெடையோடு வாழும் ஒரு பறவை. இதன் அலகு வளைந்திருக்கும்; இதன் குரல் ஊதுகொம்பின் ஒலியை ஒத்திருக்கும்; ஊர் அரவம் அடங்கிய பின்னர் நடுயாமத்தில் ஒலிக்கும்; இணையாகவே எப்பொழுதும் வாழும்; ஆண் பெடையையோ, பெடை ஆணையோ பிரிந்தால், வருந்திப் பன்முறை கூவி இறந்துபடும். பிரியாது வாழ்தலால் இதை, 'பகன்றில்' என்றும் 'பகான்றில்' என்றும் கூறுவர். அன்றில் என்ற சொல்லிலும் இக் கருத்து அமைந்துள்ளதைக் காணலாம். இச் சொல் அன்றி+இல் எனப்பிரிந்து ஒன்று இல்லாமல் மற்றொன்று உயிர் வாழாது என்னும் பொருள் தோன்ற நிற்கிறது. தமிழ் இலக்கியங்களில் அன்றில் பற்றிய பாடல்கள் பலவற்றைக் காணலாம். ஐந்திணை ஒழுக்கமாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பவற்றுள் நெய்தல் திணை ஒழுக்கமாகிய இரங்கற் பகுதியில் இப் பறவையைப் பற்றி மிகுதியும் பேசப்படுகின்றது. தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலைகண்டு இப்பறவை இரங்கி வாளா இருப்பதாகவும், 'நான் என் தலைவனைப்பிரியாது இன்பமுடன் வாழ்கின்றேன்; நீயோ உனது தலைவனைப்பிரிந்து துன்பத்தால் வருந்துகின்றாய்; உன்னைவிட நானே இன்பநலம் வாய்க்கப் பெற்றவள்' என, தலைவனைப் பிரிந்து வாடும் தலைமகளைப் பார்த்து எள்ளுவதாகவும் இரண்டுவகையாகப்புலவர்கள் இப்பறவையைப்பற்றிச் சுவைபடக் கூறுவர். கண்பார்வை மாலையில் இப்பறவைக்கு மங்கிவிடும் என்றும், பெடை அன்றில் மாலை நேரம் வந்துவிட்டது என்பதைத் தனது சேவலுக்கு அறிவித்து அதைக் கூட்டிற்கு அழைக்கும் இயல்புடையது என்றும், தன் பெடையைக் காணுவிடின் ஆண்பறவை எழுந்து அலமந்து கூவும் என்றும், கா[illegible] காலத்தில் தன் பெடையுடன் எப்பொழுதும் இடையறாது இணைந்து இருக்கும் என்றும், புலவர்கள் கூறியிருக்கின்றனர். இதன் த[illegible]

சிவந்த பூப்போன்ற தென்றும், செருப்புப் போன்ற தென்றும் எடுத்தியம்பப் பெற்றுளது.

நீர்நிலையில் உள்ள மீன்களை உண்டுவாழும் இயல்புடையது இது என்றும், மெதுவாகக்கூவும் தன்மையுடையதென்றும், ஆண் பறவை பெடையுடன் கூடித் துயிலும் பொழுது இடை இடையே விழித்து அது தன் அருகில் இருக்கின்றதா எனப் பார்க்கும் என்றும், பெடையுடன் கூடுகின்றபொழுது தன்னுடைய அலகை, பெடையின் அலகினுள் நுழைத்துக்கொண்டு இருக்கும் என்றும் இதனுடன் சேர்ந்து வாழக்கூடிய பறவைகள் காகம், குருகு, தூக்கணங்குருவி முதலியவைகள் என்றும் பாடியுள்ளனர்.

மகன்றில் என்பது நீர்வாழ்பறவையுள் ஒன்றாகும். குறுகிய கால்களை உடையது; இது எப்பொழுதும் பெடையுடன் பூவின்மீது வதியும்; பெடையுடன் இருக்கும்பொழுது இடையில் சிறு பூ தடுப்பினும் மிகவும் புலம்பும்; ஆண் பெண் இடையறாக் கூட்டுறவுக்கு இப்பறவையை உவமையாகக் கூறுவது கவிமரபு. சிலர் இம் மகன்றிலை அன்றிற்பறவை என்றே கருதுகின்றனர். வேறுசிலர் அன்றில் பறவையின் ஆண் இனமே மகன்றில் எனக் கருதுகின்றனர். மற்றொருசாரார் அன்றில்பறவை என்பது கிரௌஞ்சப்பட்சியே ஆம் எனக் கூறுகின்றனர். ஆனல் நூல்களை நுனித்துக்காண்கின்றபோது மகன்றிலும் அன்றிலும் வெவ்வேறு பறவைகளே எனநினைக்க இடன் உண்டாகிறது. எல்லாக் கோவையிலும் 'பாங்கி அருளியல் கிளத்தல்' என்ற துறைக்கு, குருகு, தூக்கணங்குருவி, காக்கை இவற்றுடன் அன்றிலையும் உதாரணமாக எடுத்துக் காட்டுவர் புலவர். அன்றில் பறவை பனைமரத்தின் அகமடலில் வாழும்; அதன் ஒலி ஊது கொம்பின் ஒலி போன்றது; அது வளைந்த வாயினையுடையது என்பவற்றை

"ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்கிரும் பெண்ணை அகமடல் அகவ"

என்ற குறிஞ்சிப்பாட்டு வரிகளால் அறியலாம். 'கொடுவாய் அன்றில்' என இந்நூலில் கூறியிருப்பதுபோல ஐந்திணை எழுபது என்ற நூலில் ஒருபாடல் 'வணர்வாய்' எனக் குறிக்கின்றது.

கம்பராமாயணத்தில் சூர்ப்பணகைப்படலத்தில் வரும்,

"சேவலோடு உறை செந்தலை யன்றிலின்
நாவினால் வலி யெஞ்ச நடுங்குவாள்"

எனவரும் வரிகளாலும்,

ஐந்திணைஐம்பது என்ற நூலில், தோழி தலைமகளுக்குச் சொல்லுவதாக வரும்

"சேவலும் தன்னருகிற் சேக்குமால் என்கொலோ
பூந்தலை யன்றிற் புலம்பு"

என்ற வரிகளாலும் அன்றில் சிவந்த பூவினைப்போன்ற தலையினையுடையது என்பது தெரியவருகின்றது.

"எரிதலைக் கன்ன செந்தலை யன்றில்"

என்பதால் நெருப்பையும் இதன் தலைச்சிவப்புக்கு உவமையாகப் புலவர் கூறிப் போந்தனர் என்பது உணரப்படுகின்றது.

"தெண்ணீர் இருங்கழி வேண்டும் இரைமாந்தி
பெண்ணைமேற் சேக்கும்"

என்பதால், நீர் நிலையில் உள்ள மீன் முதலியவற்றை உண்டுவாழும் இயல்புடையது அன்றில் என்பதை அறியலாம்.

பெடையுடன் கூடித் துயிலும் பொழுது இடைஇடையே விழித்து அது தன் அருகில் இருக்கின்றதா என ஆண் பறவை பார்க்கும் என்பதைச் சூளாமணி ஆசிரியர் காட்டும் திறன் வியத்தற்குரியது.

"கனைந்ததம் காதலிற் கனவிக் கண்திறந்து
இனைந்தபோன்று இடைஇடை நோக்கி இன்குரல்
புனைதகம் புணர்பெடை புல்லி மெல்லவே
அணைந்தருள் முரன்றன அன்றிற் சேவலே"

என்பது அப்பாடலாகும்.

பெடையுடன் கூடுகின்றபொழுது தன்னுடைய அலகைப் பெடையின் அலகினுள் நுழைத்துக்கொண்டு இருக்கும் என்பது

... ... "நேடி
மணக்கத் துணையன்றில் வாயலகு வாங்கித்
தணக்கக் கடிகாவிற் சார்ந்தாள்"

என்று கூறும் குலோத்துங்க சோழன் உலாவினாலும்,

"எனைப்பார்ப்பர் அன்றில் அலகோடு அலகுற்று இடுங்கலவி
தனைப் பார்ப்பர்"

என்று கூறும் மதுரைக் கோவையினாலும் தெளிவுறுகின்றது.

பெடையன்றில் மாலைநேரம் வந்துவிட்டது என்பதைத் தனது சேவலுக்கு அறிவித்து அதைக் கூட்டிற்கு அழைக்கும் இயல்புடையது எனபதைச் சாத்தனார் மணிமேகலையில்,

"அன்றில் பேடை அரிக்குரல் அழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்ப"

எனக் கூறுகின்றார்.

இதன் குரலைப்பற்றிக் கூறும்பொழுது குறுந்தொகை,

"அன்றிலும் பையென நரலும்"

என்றும், பெரிய திருமடல்,

"அன்றிற் பெடைவாய்ச் சிறுகுரல்"

என்றும் குறிப்பிடுகின்றன.

மகன்றிலைப்பற்றிய சில செய்திகளை இனி நோக்குவோம். மகன்றில் நீரிலே வாழும் ஓர் பறவை; பெடைக்கும் அதற்கும் இடையில் சிறு பூ தடுப்பினும் யாண்டு பல கழிந்ததுபோல நினைத்து அலமரும் தன்மையுடையது என்பதை,

"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றில் புணர்ச்சி போல"

என்ற குறுந்தொகை வரிகள் அழகாகக் குறிக்கின்றன.

பரிபாடலில்

"அடியோர் மைந்தர் அகலத்து அகலா
அலர்ஞெமன் மகன்றில் நன்னர்ப் புணர்ச்சி"

என மகன்றிலைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

... ... "ஈர் குரல்
அன்றிற்கு ஒழிய மகன்றிற்கே யாக்குமிம்
முன்றில் பனையும் எனமொழியும்"

என இராசராசசோழன்உலா அன்றிலும் மகன்றிலும் வேறுபாடுடைய பறவைகளே எனக் குறிப்பதைக் காணலாம்.

'கரும்பனையிலே வாழும் அன்றிற் பறவையே! நல்லுரைகளை நான் இருந்து சொல்லுதலைக் கெடுத்துவிட்டார் தலைவர் என, கலங்கிய என் துயரை அறிந்தனையாய் மிகவும் என்னைத் துயரத்தில் ஆழ்த்த ஆரவாரிக்கின்றாயா? அன்றி, முன் இனிதாய்க் கூடிப் பின்பு பிரிந்தாரை என்போல் நீயும் உடையையாய் இருப்பதால் வருந்துகின்றாயா? கூறுவாயாக' என்பதை,

"மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றில்
நன்றறை கொன்றனர் அவரெனக் கலங்கிய
என்துயர் அறிந்தனை நரறியோ எம்போல
இன்துணைப் பிரிந்தாரை யுடையையோ? நீ"

என்னும் கலித்தொகைச் செய்யுள் வரிகள் அழகாகக் கூறுகின்றன.

ஒருவன் பொதுமகள் ஒருத்தியின் வலையிலே வீழ்ந்தான்; அவனிடத்தில் செல்வம் இருக்கும் வரையிலும் ஆசைவார்த்தைகளை அப்பொதுமகள் கூறினாள்; செல்வத்தை எல்லாம் அவனிடம் இருந்து கைப்பற்றியதும் அவனை வெவ்வுரை கூறி விலக்கிவிட்டாள்; பொதுமகளால் இழிநிலையடைந்த அவன், அவள் பண்டுகூறிய அன்பு வார்த்தைகளை நினைக்கிறான். 'புணர்பிரியா அன்றிலும்போல்' வாழ்வோம் எனப் பொதுமகள் கூறிய சொற்கள் அவன் நினைவிற்கு வருகின்றன. அத்தகைய வார்த்தைகளைக் கூறிய பொதுமகள், 'போர்த்தகர்க் கோடாயின' நிலைகண்டு உள்ளம் உடைந்து, தன் நெஞ்சைப்பார்த்துக் கூறுவதாக வரும் நாலடியார்ச் செய்யுள்,

"பொத்தனூற் கல்லும் புணர்பிரியா அன்றிலும்போல்
நித்தலும் நம்மைப் பிரியலம் என்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினுள் நன்னெஞ்சே!
நிற்றியோ? போதியோ? நீ"

என்பதாம்.

வெளிநின் றவரோ போய்மறைந்தார்
விலக்க ஒருவர் தமைக்காணேன்
எளியன் பெண்ணென் றிரங்காதே
எல்லி யாமத் திருளூடே
ஒளியம் பெய்யு மன்மதனார்
உனக்கு மாற்றம் உரைத்தாரோ?
அளியன் செய்யும் தீவினையே
அன்றி லாக வந்தாயோ?

என்ற செய்யுளாலும்

கனையேழ் கடல்போல் கருநா ழிகைதான்
வினையேன் வினையால் விடியா விடினீ
தனியே பறவாய் தகவே துயிலாய்
பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ?

என்ற செய்யுளாலும்

கம்பர் கண்ட அன்றிலை நாம் ஒருவாறு உணர்கின்றோம்.

ஆரவாரம் மிக்க உலகச் சூழலில் அகப்பட்டுள்ள நாம், இயற்கைச் சூழலில் இருந்து சேணெடுந்தூரம் விலகியுள்ளோம். ஆகையால் இயற்கைப்புள்ளினங்களை உள்ளவாறு இப்பொழுது அறிந்துகொள்ள இயலவில்லை. நுண்ணறிவும் ஊக்கமும் விழிப்பு உணர்ச்சியும் உள்ள இயற்கை நூல்வல்லுநர்கள் ஆராய்ந்தால் இப் பறவை யினத்தைத் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறுதல் தவறாகாது.

அன்றில் தரு அன்பு நெறி வாழ்க.

---

# கம்பர் யார்?

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனர் தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

## முன்னுரை

இராமாயணம் பாடிய கம்பர் உவச்சர் குலத்தவர் என்றும், உவச்சர் காளிகோவில் பூசாரிகள் என்றும் ஒருசாரார் கூறுகின்றனர். கம்பர் கம்பநாடு என்னும் சிறுநிலப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பிறிதொரு சாரார் கூறுவர். கம்பர் வேளாளர் என்று மற்றொரு சாரார் சொல்லுவர்.

## நெல்வேலி மாவட்டத்தில்

நெல்வேலி மாவட்டத்தில் அரிகேசவ (அரிகேசரி) நல்லூரில் வ. உ. சி, படிப்பகம் ஒன்று இருக்கிறது. அதன் முதல் ஆண்டு விழாவிற்கு நான் சென்றிருந்தேன். அதன் தலைவர் மூக்கையா கம்பர் என்பதைக் கேட்டவுடன் அவரைப் பலபட விசாரித்தேன். அவர் கீழ்வரும் விவரங்களைக் கூறினார்.

"கம்பர் என்னும் பட்டம் உடையவர் சில நூற்றாண்டுகளுக்கு முன் வரையிற் காளி கோவில் பூசாரிகளாகவே இருந்தனர்; பின்பு நாதசுரம் வாசிப்பதிலும் பயிற்சி பெற்றனர்; விழாக் காலங்களில் கொடியேற்றும்போது கம்பரும் கோவில் அர்ச்சகரும் வடமொழியில் சமமாக மந்திரம் கூறுவர். அஷ்டதிக்குப் பாலகர்க்கு மட்டுமே மந்திரம் கூறுவர். இவர்களைப் 'பாரிசைவர்' என்று அழைப்பதும் உண்டு. கோவில் மாடவீதியில் இவர்களுக்கு வீடு உண்டு. சிலருக்குப் 'பல்லவராயர்' என்ற பட்டமும் உண்டு. இவர்கள் பாணி என்னும் வாத்தியம் ஒலிப்பர். பாணி என்பது நடுவில் குறுகி இருபுறமும் தட்டக்கூடிய ஒரு தோற் கருவி. 'தம்பிராட்டி' முதலிய பெயர்களைப் பெண்களுக்கு வழங்குகின்றனர்.

"கம்பர் என்னும் பட்டம் உடையவர் உவச்சர் என்றும் உவச்சப் பிள்ளை என்றும் அழைக்கப் படுவர். ஸ்ரீவைகுண்டத்தில் உவச்சர் தெரு இருக்கின்றது. நெல்வேலி மாவட்டத்திலும், கன்னியாகுமரிப் பகுதியிலும் உவச்சர் வாழ்கின்றனர். சுந்தரராச கம்பர், கோமதிக் கம்பர், லேவனக் கம்பர், கந்தக் கம்பர், மாடசாமிக் கம்பர்

இலட்சுமணக் கம்பர் என உவச்சர் பெயர்கள் வழங்குகின்றன. கன்னியா குமரியில் சுடலையாண்டிக் கம்பர் சிறந்த நாதசுர வித்துவானவர்.

"காளிகோவில் பூசாரிகளாக இருந்த உவச்சர் நாதசுரம் பயிற்சி பெற்று வாசிக்கின்றனர். இவர்கள் வேறு; இசை வேளாளர் வேறு. காருகுறிச்சி அருணாசலம் வேறு இனத்தவர்; சுடலையாண்டிக் கம்பர் வேறு இனத்தவர். வேதம் ஓதிக்கொண்டிருந்த ஐயர் சங்கீத வித்துவானாக இருப்பதுபோலக் காளிகோவில் பூசாரிகளாக இருந்த கம்பர் மரபினர் நாதசுரவித்துவான்களாக இருக்கின்றனர்.

"இக் கம்பர் மரபினர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ம பெற்றிருந்தனர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அவ்வாறு புலமை பெற்றிருந்த சிலர் நெல்வேலி மாவட்டத்திலிருந்த சமீன்தார்களிடம் சிறப்புப் பெற்றனர்."

## கம்பர் உவச்சர் மரபினர்

இவ் விவரங்களை நோக்க, "கம்பர்" என்பது இயற்பெயர் அன்று என்பதும், காளிகோவில் பூசாரிகளைக் குறித்து வந்த பொதுப்பெயர் என்பதும் தெளிவாகும் சோழநாட்டுப் புலவர் 'சோழர்' என்று பெயர் பெற்றதில்லை; சேரநாட்டுப் புலவர் 'சேரர்' என்று பெயர் பெற்றதில்லை. இவ்வாறே கம்பநாட்டுப் புலவர் கம்பர் எனப் பெயர் பெறுதல் இயலாது. ஆகவே கம்பர் என்பது சுடலைபாண்டிக் கம்பர், இராமையாக் கம்பர், மூத்துக் கம்பர் என்றாற் போல ஒரு இனத்தவர்க்கு வழங்கும் பொதுப்பெயராகும். ஆகவே, சேக்கிழான் இராமதேவன் எனபவர் 'சேக்கிழார்' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பெற்றாற் போலவே, இராமாயணம் பாடிய ஆசிரியர் 'கம்பர்' என்னும் பொதுப் பெயரால் அழைக்கப் பெற்றார் என்று கொள்ளுதல் தகும். கல்வியிற் சிறந்த உவச்சர் மரபைச் சேர்ந்த இராமாயண ஆசிரியர், அம்மரபுக்கு உரிய பட்டத்தால் அழைக்கப் பெற்றார் என்று கொள்வதே பொருத்தமானது. எனவே, கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப் பெறும் கம்பர் பெருமான் உவச்சர் மரபினர் என்று கொள்வது பொருத்தமே யாகும். அறிஞர் இதனை மேலும் ஆராய்வது நல்லது.

---

34

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச், உரை) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் | 1 | 4 | 0 |
| | ன்னூற்றிரட்டு (செலக்ஷன்) | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | 0 | 4 | 0 |
| 2. | கஞநால் (5) இனியநாற்பது (உரை) | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | 0 | 6 | 0 |
| 8. | நவமணிமாலை நூற்றைம்பது (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | 0 | 12 | |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | 0 | 4 | |
| 19. | தேவையுலா | 0 | 3 | |
| 21 | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | 0 | 8 | |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் | 1 | 0 | |
| 23. | விக்கிரமசோழனுலா | 0 | 8 | |
| 24. | குருமொழிவினாவிடை | 0 | 1 | |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை | 0 | 2 | |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | 0 | 1 | |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை | 0 | 8 | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | 0 | 3 | |
| 32. | மநீஷாபஞ்சகம் | 0 | 8 | |
| | உவமானசங்கிரகம் | 0 | 1 | |
| | மாறனலங்காரம் மூலமும் உரையும் | 4 | 8 | |
| 38. | திருப்புல்லாணிமாலை | 0 | 2 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... .. ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... .. ... | 0 | 8 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜனி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | திணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 52 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

---

இவ்விதழ் திரு. பி. டி. இராசன் அவர்களால், மதுரைத் தமிழ்ச்சங்க வீதி, தமிழ்ச் சங்க அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது.